
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 10 ஜனவரி 1997 இதழ் - 1



வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. சங்கீதம் 19:1

வெளியிடுவோர் :

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே

பக்கம்


1. "ஊசா" விடமிருந்து... 1
2. சிறந்த முன்னோடிகள் தேவை 10
3. பெண்கள் பகுதி 14
4. Invitation 18
5. நான் ஏன் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராக இருக்கிறேன்? 19
6. சபை கூடிவருவது மிக அவசியமா? 22
7. பிரசங்கியார் பகுதி 24
8. விசுவாசத்தின் அடிப்படை 27

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 10 JANUARY - 1997 ISSUE - 1


## ஆசிரியர் உரை

# "ஊசா" விடமிருந்து....

இந்த உலகத்தில் பிரபலமடைந்தவர்களின் பட்டியலை நாம் பரிசோதித்துப் பார்த்தால், அதற்குக் காரணங்கள் பல இருப்பதைக் காணமுடியும். பிறப்பால் புகழ் அடைந்தவர்கள் உண்டு. வாழ்க்கையின் மூலம் வளர்ந்தவர்கள் உண்டு. உழைப்பால் உயர்ந்தவர்கள் உண்டு. எழுத்தால் எழுந்தவர்கள் உண்டு. பேச்சால் பெயர் பெற்றவர்களும் உண்டு. இவ்வரிசையில் சிலர், தங்கள் மரணத்தின் மூலம் சேர்ந்து கொள்வதுமுண்டு. இவர்களின் பிறப்பைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும், இன்னும் பல சிறப்புகள் பற்றியும் பேசுவதற்கு ஒன்றுமேயிருக்காது. மரணம் கூட ஒரு நன்மையின் அடிப்படையில் நடந்ததாக இருக்காது. ஆனால், பின்வரும் நாட்களிலெல்லாம் பேசப்படக்கூடிய நபராக மாறிவிடுவர். அப்படிப்பட்டவர்களில் ஒருவனாகத்தான் இந்த "ஊசா", இப்புதிய ஆண்டின் துவக்கத்தில், நமது இதழின் தலையங்கத்தை ஆக்கிரமித்துக்கொள்ள வந்துள்ளான்.

ஆம், இவனுடைய மரணம் தவிர இவனைப்பற்றிப் பேச ஒன்றுமேயில்லை. ஆபேல் மரித்தும் பேசிக்கொண்டிருப்பதாக எபிரேய ஆசிரியர் சொல்கிறார் .(எபி.11:4) அதைப்போலவே இவனும் பேசிக்கொண்டிருக்கிறான். மன்னிக்கவும். எச்சரித்துக் கொண்டிருக்கிறான். பவுல் அப்போஸ்தலன் ரோமையருக்கு எழுதும்போது, "....நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு

எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோம.15:4) என்று அழகாகக் குறிப்பிடுகிறார். இம்மனிதனின் மரணம் இவ்வசனத்திற்கு மேலும் சிறப்புச் சேர்க்கிறது.

கர்த்தருக்கு இவன்மேல் மூண்ட கோபத்தினால், இவன் அடிக்கப்பட்டு, தேவனுடைய பெட்டியண்டையில் செத்தான் என்று வேதம் கூறுகிறது. (IIசாமு 6:7). இவ்வளவு கடுங்கோபம், இவன்மேல் மூண்டதற்கு என்ன காரணமென்பதை முந்தின வசனத்தில் காணலாம். கர்த்தருடைய பெட்டியாகிய உடன்படிக்கைப் பெட்டியை ஏற்றி வந்த வண்டியின் மாடுகள் மிரண்டு, பெட்டி அசைந்தது. இரதத்தை நடத்திக்கொண்டு வந்த இருவரில் ஒருவனாகிய ஊசா (வ.3), பெட்டி கீழே விழுந்துவிடக் கூடாது என்ற ஆதங்கத்தில் தன்கையை நீட்டிப் பிடித்தான். (வ.6) ஊசா செய்த குற்றம் இவ்வளவுதான். பெட்டியைத் தொட்டான். விழுந்தது அடி. நம்முடைய பாணியில் அவன் ஸ்பாட் அவுட். இங்கே கர்த்தரின் செயல்பாடு நமது அறிவுக்கு விநோதமாக உள்ளது. ஜீரணிக்க சிரமமாக உள்ளது. ஒரு பக்திமான் படுகொலை செய்யப்பட்டான் என்றுதானே நினைக்கத் தோன்றுகிறது. அறிவுக்குத் தீனி என்று நினைத்து விதவிதமாகச் சிந்திக்காதீர்கள். நிறுத்துங்கள். தேவன் தமது கிரியைகளிலெல்லாம் நீதியுள்ளவர். (சங். 145:17) அணைத்தாலும், தமது நீதியின்படியே அணைக்கிறார். அடித்தாலும் தமது நீதியின்படியே அடிக்கிறார். நமது அறிவுக்கு எட்டவில்லையென்பதற்காக தேவனை நாம் குறைகூறத் துணிந்துவிடக்கூடாது.

உடன்படிக்கைப் பெட்டியைத் தொட்டதில் என்ன தவறு என்று தானே கேட்கிறீர்கள்? அதைப் புரிந்து கொள்ள அதன் பின்னணியைக் கொஞ்சம் தெரிந்துகொள்வது அவசியம்.

தேவாலயத்துப் பணிமுட்டுகளில் மிகவும் பரிசுத்தமானதாகக் கருதப்பட்டது இந்த உடன்படிக்கைப் பெட்டிதான். இப்பெட்டிக்கு "கர்த்தருடைய பெட்டி" "சாட்சிப் பெட்டி" என்று பல பெயர்கள் உண்டு. இஸ்ரவேலருடைய வனாந்திர யாத்திரையில் சீனாய் என்னுமிடத்தில், பெசலெயேல் என்பவனைக் கொண்டு, சீத்திம் மரத்தால் இப்பெட்டி செய்யப்பட்டது (யாத்.37:1) இது, சுற்றிலும் பொன் தகட்டால் மூடப்பட்டிருந்தது. இதன் நீளம் சுமார் 4 அடியும், அகலமும், உயரமும் 21/2 அடியுமாகும்.

மேலும் இந்த உடன்படிக்கைப் பெட்டி, தேவன் கொடுத்த மாதிரியின்படியாக உருவாக்கப்பட்டது. நோவாவுக்குப் பேழையைக் கட்டச் சொன்னபோது எப்படி ஒரு தெளிவான மாதிரியைக் கொடுத்தாரோ, அதைப்

போலவே, உடன்படிக்கைப் பெட்டிக்கும் துல்லியமான மாதிரி கொடுக்கப் பட்டது. (யாத்.25 அதி). தேவன் அவருக்காகச் செய்யப்படும் எந்தவொரு காரியத்திற்கும், தெளிவான திட்டத்தைக் கொடுக்கிறார். மனிதர்களாகிய நாம் நம்முடைய சௌகரியம் போல் செய்து கொள்ள அனுமதிப்பதில்லை. கூட்டவும், குறைக்கவும் நமக்கு அதிகாரமில்லை. ஆனால் இன்று பரிசுத்தமும், பயங்கரமுமான தேவனின் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டு, கிறிஸ்தவ மத உலகம் போடும் ஆட்டத்திற்கு அளவேயில்லை. கிறிஸ்தவனாக மாறுவதற்கும், கிறிஸ்தவனாக ஜீவிப்பதற்கும், அவரை ஆராதிப்பதற்கும், அவருக்குக் கொடுப்பதற்கும், கர்த்தருடைய பந்தியை கடைப்பிடிப்பதற்கும், அவரைத் துதித்துப் பாடுவதற்கும் தேவன் ஒரு தெளிவான மாதிரியை வசனங்களில் கொடுத்திருக்கிறார். ஆனால், நாம் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் ஜீவித்துக் கொண்டுள்ளோம். புதிய பிரமாணத்தின் கீழாக வாழ்கின்ற நம்மோடு தேவனின் செயல்பாடு ஒருவேளை மாறியிருக்கலாம். ஆனால், தேவநீதி என்பது ஒருபோதும் மாறாது என்பதை மறந்துவிடாதீர்கள். அன்று சுடச்சுட தண்டித்த தேவன், இன்று பாராமுகமாக இருக்கிறாரென்று நினைத்து, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். புகழ்மிக்க மார்ஸ் மேடைப் பிரசங்கத்தில் பவுலடியார் என்ன சொல்கிறாரென்று பாருங்கள். **"மேலும், ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்ப்பார்..."** (அப் 17:31)

சரி, உடன்படிக்கைப் பெட்டி பரிசுத்தமானதென்பதற்குப் பலமான காரணங்கள் இரண்டு உண்டு. 1. பிரமாணங்களடங்கிய இரண்டு கற்பலகைகளும் (யாத்.25:16, 21) மற்றும் வனாந்திர யாத்திரையில் வானத்திலிருந்து பொழியப்பட்ட மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனின் தளிர்த்த கோலும், (எபி.9:4,5) பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்தது. 2. இப்பெட்டி வைக்கப்பட்ட இடம் பரிசுத்த ஸ்தலமாக மாத்திரமல்ல, தேவன் தன்னுடைய தாசர்களை சந்திக்கும் இடமாகவும் இருந்தது. (யாத்.25:22, 30:36, லேவி.16:2, யோசு.7:6)

இவ்வளவு மகத்துவம் பெற்ற இந்தப்பெட்டி, நியாயாதிபதிகளின் காலத்தில் சீலோவுக்குக் கொண்டுபோகப்பட்டு, (I சாமு. 1:3, 3:3), பிறகு எபெனேசர் என்ற இடத்தில், யுத்த களத்தில் பெலிஸ்தரால் பிடிபட்டுப் போயிற்று. (I சாமு.4:1,17). கர்த்தர் இப்பெட்டியினிமித்தம் பெலிஸ்தரை ஏழு மாதங்கள் வாதித்தார். (Iசாமு.6:1). பொறுக்கமுடியாத பெலிஸ்தர், கர்த்தருடைய பெட்டியை, தங்களுக்குத் தெரிந்த முறைமையின்படி, மாடுகள் பூட்டப்பட்ட வண்டியில் ஏற்றி (Iசாமு.6:11) கீரியாத் யாரீமில் கொண்டு வந்து சேர்த்தனர். அங்கிருந்து பெட்டியை,

இஸ்ரவேலர் எடுத்து வந்து, அபினதாபின் வீட்டில் சேர்த்து, அதைக் காக்கும்படி, அவன் குமாரனாகிய எலெயாசாரைப் பரிசுத்தப்படுத்தினார்கள் (I சாமு.7:1). பிறகு இங்கிருந்து தாவீது அரசனால், பெலிஸ்தர் செய்ததைப் போலவே வண்டியில் ஏற்றப்பட்டு, ஆடலோடும், பாடலோடும், ஊசாவின் மரணத்தோடும், எருசலேமுக்குக் கொண்டு வரப்பட்டு, கூடாரத்தில் வைக்கப்பட்டது. (II சாமு.6:17). அதன் பிறகு எருசலேம் தேவாலயத்தில், சாலமோன் ராஜாவால் மிகுந்த ஆர்ப்பாட்டத்தோடு வைக்கப்பட்டது. (I ராஜா.8:1 முதல்) இறுதியாக கி.மு. 587–ல் பாபிலோனியர் எருசலேமின் மீது படையெடுத்தபோது, அப்பெட்டி காணாமல் போய்விட்டது என நம்பப்படுகிறது. இப்பெட்டியைப் பற்றி மீண்டும் வேதாகம சரித்திரம் ஒன்றும் பேசவில்லை.

பரிசுத்தமான, இந்த உடன்படிக்கைப் பெட்டி தொலைந்து போக தேவன் எப்படி அனுமதிப்பார் என்று எண்ணுகிறீர்களா? இதற்கு இப்படி ஒரு நிலை வரும் என்பதையும், எரேமியா தீர்க்கனைக் கொண்டு தேவன் வெளிப்படுத்தியே உள்ளார். “நீங்கள் தேசத்திலே பெருகிப் பலுகுகிற அந்நாட்களிலே, அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியென்று இனிச் சொல்வதில்லை. அது அவர்கள் மனதில் எழும்புவதும் இல்லை. அது அவர்கள் நினைவில் வருவதும் இல்லை; அதைக் குறித்து விசாரிப்பதும் இல்லை; அது இனிச் செப்பனிடப்படுவதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்” (எரே.3:16). சரி, தேவனால் முடித்து வைக்கப்பட்ட ஒன்றை இதற்குமேல் பேசுவது நியாயமல்ல.

இனி, இந்த ஊசா தரும் பாடங்களைப் பார்ப்போம்.

## I *பரிசுத்தமானது சாதாரணமாகும் அபாயம்*

பெலிஸ்தர், கர்த்தருடைய பெட்டியை அனுப்பின பிறகு, அது அபினதாப் என்பவனிடம் இருந்தது. அபினதாப் வம்சத்தார் அதைப் பாதுகாத்து வந்தனர். ஆக, அபினதாப் மற்றும் அவன் வம்சத்தாரிடம் உடன்படிக்கைப் பெட்டி அநேக ஆண்டுகள் இருந்ததாக அறியலாம். தேவனுடைய பெட்டி தங்கள் குடும்பத்தில் பல வருடங்கள் இருந்தபடியால், அதன் மகத்துவமும், மேன்மையும் அவர்களுக்கு விளங்காமல் போய்விட்டது. தங்கள் வீட்டிலிருந்த மற்ற தட்டுமுட்டுச் சாமான்களைப் போலவே இதையும் அபினதாபின் சந்ததியர் கருதிவிட்டனர். தேவனுடைய பெட்டியைத் தொடலாமா, கூடாதா? தொட நமக்கு உரிமை உண்டா? அருகதை இருக்கிறதா? என்பது பற்றியெல்லாம் அவர்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

இவைகளை அறியாததின் விளைவு என்ன தெரியுமா? அடி. மரண அடி. இன்றைக்கும் கூட கிறிஸ்தவ சமுதாயத்திடம், கிறிஸ்துவின் சபையாரிடம் இப்படிப்பட்டதான ஒரு அபாய போக்கு கண்கூடாகத் தெரிகிறது. தேவன் சம்பந்தப்பட்ட காரியத்தில், தேவனுடைய உபதேசம் சம்பந்தப்பட்ட காரியத்தில் பெரும் அலட்சியம் காணப்படுகிறது. ஆராதனைக்குச் செல்லும்போது, கர்த்தருடைய சமூகத்திற்கு செல்கிறோம் என்ற பயம் இல்லை. ஆராதனையில் உட்கார்ந்திருக்கும்போது, கர்த்தருடைய பிரசன்னம் அங்கு உள்ளது என்ற பயம் இல்லை. பெரும்பாலான பிரசங்கிகளுக்கு, தேவனுடைய வார்த்தையைப் பற்றிப் பேசுகிறோம் என்ற உணர்வுகூட இல்லை. கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்போது, அதன் மாண்பை அறிந்து கொள்வதில்லை. தன்னைத் தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்" (Iகொரி.11:28) என்ற வசனத்தை மதிப்பதில்லை. இதே நிலைதான் பாடும்போதும், கொடுக்கும்போதும்.

மொத்தத்தில் எல்லாமே விளையாட்டாக நடத்தப்படுகிறது. தேவனுடைய வார்த்தை தமாஷாக பயன்படுத்தப்படுகிறது. வேதாகமத்தில் தேறின இருவர், ஒரு முறை வசனத்தை வைத்தே தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டதை நான் கண்டேன். பிழைப்புக்காக தேவ வசனங்களும், தேவ காரியங்களும் பந்தாடப்படுகிறது. பயம் என்பது பெரும்பாலானவர்களிடம் மருந்துக்குக்கூட இல்லை.

ஐயோ, இது தேவ காரியமாயிற்றே, ஐயோ இது தேவ உபதேசமாயிற்றே, ஐயோ இது தேவனுடைய சபையாயிற்றே, ஐயோ இது தேவ சமூகமாயிற்றே, ஐயோ இது தேவனுடைய பணமாயிற்றே, ஐயோ, இது தேவனுடைய பொருளாயிற்றே என்றெல்லாம் யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கும்" (எபி.10:31) என்ற வசனத்தை காலின் கீழ்போட்டு மிதித்துக் கொண்டுள்ளோம்.

முற்பிதாக்களில் ஒருவனாகிய, யாக்கோபு ஒரு முறை தன் மாமனாகிய லாபானிடம் என்ன சொல்லுகிறான் என்பதைக் கவனியுங்கள். "என் பிதாவின் தேவனாகிய ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் பயபக்திக்குரியவரும்... (ஆதி.31:42). ஈசாக்கின் பயபக்திக்குரியவர் என்பதை ஆழ்ந்து கவனிப்பது அவசியம். ஆபிரகாமுக்குக்குப் பயன்படுத்தப்படாத வார்த்தையை, பரிசுத்த ஆவியானவர் இங்கே ஈசாக்குப் பயன்படுத்தியுள்ளார். பரிசுத்த ஆவியானவர் வெறுமனே இவ்வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. மிகுந்த பொருள் உண்டு.

கவனியுங்கள். ஆபிரகாமுக்கும் தேவனிடம் பக்தி இருந்தது. ஈசாக்குக்கும் தேவனிடம் பக்தியிருந்தது. ஆனால், ஆபிரகாமைக் காட்டிலும் ஈசாக்குக்கு தேவனிடம் பயம் இருந்தது. மலடியாயிருந்த தன் மனைவிக்காக கர்த்தரிடம் தான் முறையிட்டானேயொழிய (ஆதி.25:21), ஆபிரகாமைப் போல மாற்று வழி தேடவில்லை. மேலும், பலதார மணம் அந்நாட்களில் பிதாவாகிய தேவனால் சகித்துக் கொள்ளப்பட்டது. அப்பொழுதுகூட பயம் நிறைந்த இந்த பக்திமான் அதற்கு உடன்படவில்லை. ஏகபத்தினி விரதனாக எழும்பி நின்றான். தேவனுடைய காரியத்தில் இவனுக்கிருந்த பயத்தையே இது காட்டுகிறது.

பயம் இல்லாத பக்தியில் பயனேதுமில்லை. அநேகராகிய நமக்குப் பக்தி உண்டு. ஆகவே தான் ஜெபிக்கிறோம். வேதம் வாசிக்கிறோம். ஆராதனைக்குப் போகிறோம். காணிக்கை கொடுக்கிறோம். இவ்வளவும் செய்தும் பாவம் நம்மை விட்டு அகன்றபாடில்லை. என்ன காரணம்? தேவனைப் பற்றிய பயம் இல்லை. நம்முடைய தேவ விரோதச் செயல்கள் நிழல்போல் தொடர்வதற்கு இது தான் காரணம்.

அன்பரே! ஊதாவுக்கும் பக்தியிருந்தது. ஆகவே தான் இரசத்தை நடத்தும் பொறுப்பை ஆசையாய் ஏற்றுக்கொண்டான். ஆனால், தேவ ஆலோசனையை கட்டளையை மீறக்கூடாது என்ற பயம் இல்லை. விளைவு தண்டனை. ஆகவே, நாம், நம்முடைய பக்தி பயத்தோடு கூடியதாக உள்ளதா என்று நிதானித்துப் பார்ப்பது அவசியம்.

## II பாரம்பரியம் என்ற அபாயம்

உடன்படிக்கைப் பெட்டி பல ஆண்டு காலம் ஒரே இடத்தில் இருந்தது. அதை இடம் மாற்றி எருசலேம் கொண்டுபோக முடிவுசெய்தபோது, தேவ ஆலோசனை புறக்கணிக்கப்பட்டது.

ஆம், பெலிஸ்தர் எப்படி இதை நம்மிடம் கொண்டு வந்தார்களென்று பார்த்தார்கள். ஒருவேளை யாராவது ஒருவர், அவர்கள் மாடுகள் பூட்டப்பட்ட வண்டியில் கொண்டு வந்ததை நினைவுபடுத்தியிருக்கலாம். சரி, அந்தமுறையை மாற்ற வேண்டாம் என்று எண்ணி, தேவனை அறியாத அந்த புறஜாதியாரின் மாதிரியைப் பின்பற்றி, மாடுகள் பூட்டப்பட்ட வண்டியில் ஏற்றினர்.

தேவன் தந்த மாதிரியைப் பின்பற்றவேண்டிய தேவ ஜனம், தேவன் யார் என்று தெரியாத அந்நிய ஜனங்களின் மாதிரியைப் பின்பற்றி பாரம்பரியம் என்ற பாவத்தைச் செய்தனர். உடன்படிக்கைப்பெட்டி ஒரு இடத்திலிருந்து இன்னொரு

இடத்திற்கு எப்படிக் கொண்டு செல்லப்பட வேண்டுமென்பதை தேவன் தனது வசனங்களில் வெளிப்படுத்தியுள்ளார். ஆரோனின் குமாரரும், லேவியின் புத்திரரும் தங்கள் கடமைகளை முடித்துத் தீர்த்த பின்பு, கோகாத் புத்திரர் அதைச் சுமக்க வேண்டும். நன்றாகக் கவனியுங்கள் கோகாத் புத்திரர் சுமக்கத்தான் வேண்டுமேயொழிய அதைத் தொடக்கூடாது. (எண்.4:15) யார் எதைச் செய்ய வேண்டுமென்பதை மிக, மிகத் தெளிவாகச் சொல்லியுள்ளார்.

இந்த தேவ கட்டளையைத் தேடி, ஆராய்ந்து அதன்படி தாவீதும், இஸ்ரவேல் மூப்பர்களும் செய்திருந்தால், உடன்படிக்கைப் பெட்டியை மாடுகள் பூட்டப்பட்ட வண்டியில் ஏற்றியிருக்கத் தேவையில்லை. அபினதாபின் குமாரராகிய ஊசாவும், அகியோவும் இரதத்தை நடத்தியிருக்கவும் தேவையில்லை. கோகாத்தின் புத்திரர் சுமந்திருந்தால், மாடுகள் மிரண்டதைப் போல இந்த மனிதர்கள் மிரண்டிருக்கமாட்டார்கள். உடன்படிக்கைப் பெட்டி அசைந்துமிருக்காது. சாய்ந்துமிருக்காது. ஊசா தொட்டிருக்க வேண்டிய அவசியமும் வந்திருக்காது. தேவன் அவனை அடித்திருக்கவுமாட்டார். அங்கே ஒரு நல்ல மனிதர் மரித்திருக்க வேண்டிய அவசியமுமில்லை.

பாரம்பரியத்தின் பயங்கரத்தைக் கவனித்தீர்களா? நாம் நம்முடைய வாழ்க்கையில் எதற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டுள்ளோம்? பாரம்பரியத்திற்கா? தேவ வசனத்திற்கா? சொல்லுங்கள். தேவ ஆலோசனையும், கட்டளையும் மீறப்படும்போது தண்டனை நிச்சயம். இன்றைக்கு கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் மனித கோட்பாடுகளுக்கும், சமுதாயத்தின் கட்டுப்பாட்டுக்கும், சாரமில்லாத சடங்காச்சாரங்களுக்கும் தங்களை ஒப்புக்கொடுத்து பாவம் செய்துகொண்டுள்ளனர்.

வெட்கப்பட வேண்டிய வேறொன்றையும் சொல்கிறேன். நமது இளைஞர்கள் பக்தி என்ற போர்வையில் புற மதத்தவரைப் போல பல வண்ணங்களில் வேட்டி, அணிந்து, பாசி போட்டு விரதமும் இருக்கின்றனர். என்னவென்று ஒரு இளைஞனைக் கேட்டேன், "வேளாங்கன்னி" என்றான். ஒரு கணம் திகைத்து நின்று, பிறகு என் நிலைக்கு வந்தேன். நம்முடைய செயலுக்கு தேவ ஆலோசனையைத் தேடாததால், சமுதாயம் எங்கே போகிறது பார்த்தீர்களா? பாரம்பரியத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து, நம்மையும், நமது சந்ததியையும் தேவ கட்டளைக்கு ஒப்புக்கொடுப்போம். தண்டனைக்குத் தப்புவோம்.

## III கீழ்ப்படியாமை என்ற அபாயம்

ஊசாவின் மரணத்தில், தேவனின் கடுமையான அதிருப்தி வெளியாக்கப்பட்டுள்ளது. இந்த அடிக்கு கீழ்ப்படியாமை தான் காரணம் என்பதை தாவீது தெளிவாக்குகிறார். "தாவீது அவர்களை நோக்கி : லேவியரில் நீங்கள் பிதாக்களுடைய சந்ததிகளின் தலைவர், நீங்கள் இஸ்ரவேலரின் தேவனாகிய கர்த்தரின் பெட்டியை அதற்கு நான் ஆயத்தம் பண்ணின ஸ்தலத்திற்குக் கொண்டுபோகும்படி, உங்களையும், உங்கள் சகோதரரையும் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். முதலில் நீங்கள் அதைச் சுமக்காத படியினாலும், நாம் நம்முடைய தேவனாகிய கர்த்தரை நியாயமானபடியே தேடாதே போனபடியினாலும், அவர் நமக்குள்ளே அடி விழப் பண்ணினார் என்றான்" (நாளா.15:13)

தேவன் சொல்வதற்குச் செவிகொடாமல் இருப்பதும் கீழ்ப்படியாமை தான். தேவன் சொல்லியிருப்பதற்கு மாற்றாக ஒன்றைச் செய்வதும் கீழ்ப்படியாமை தான். தேவன் உடன்படிக்கைப் பெட்டியை மாட்டுவண்டியில் ஏற்றி கொண்டு போகக் கூடாது என்று கட்டளையிடவில்லை என்பது உண்மை. ஆனால் எப்படிக் கொண்டுபோக வேண்டுமென்று சொல்லியுள்ளாரே. அதற்கு மாற்றாகச் செய்வதும் கீழ்ப்படியாமை என்ற பாவம் தான்.

இவ்வுண்மையை அடிப்படையாக வைத்துப் பார்த்தால், கிறிஸ்தவம் இன்று எண்ணிடலங்கா தவறுகளைச் செய்துகொண்டுள்ளது. மாறுபட்ட உபதேசங்கள் ஏராளம். வேத வசனம் ஒன்றைச் சொல்லியிருக்க வேறுவிதமான போதனைகள் செய்யப்படுகிறது. வேடிக்கையென்னவெனில், அவைகளுக்கு கிறிஸ்தவர்களிடம் கிடைக்கும் வரவேற்புதான். "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங் களின்படி போதிக்கக்கடவன்.." (Iபேது. 4:11) என்று சொல்லப்பட்டுள்ள வசனத்திற்கு நிறைய பிரசங்கிகள் கீழ்ப்படிவதில்லை.

ஞானஸ்நானம், இரட்சிப்பு, கர்த்தரின் பந்தி, காணிக்கை என்று, இப்படி எல்லாவற்றிலும் தேவ ஆலோசனையும் கட்டளைகளும் முற்றிலும் மீறப்படுகிறது. அல்லது மாற்றானது போதிக்கப்படுகிறது.

அருமையான நண்பரே! சகோதரரே! தேவ தயவால் நமக்கு ஓர் ஆண்டு கூட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. பலத்தினாலும், பணத்தினாலும் நாம் இதைச் சம்பாதிக்கவில்லை. தேவன் போட்ட பிச்சை. நம்மைக் காட்டிலும் நல்லவர்களும், நம்மைக்காட்டிலும் எல்லாவகையிலும் சிறந்தவர்களும் இந்த ஆண்டைக் காணாமல் மறைந்து இருக்கிறார்கள் என்பது தெரிகிறதா?

தேவன் இந்த ஆண்டை ஏன் நமக்குக் கூட்டிக் கொடுத்தார்? தேவனின் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு நோக்கமுண்டு என்ற உண்மை உங்களுக்குத் தெரியாமலிருக்க நியாயமில்லை. இந்தப் புதிய ஆண்டிலாவது நாம் கனி கொடுக்கும் ஒரு வாழ்க்கையை நடத்த முயற்சிப்போம். வெற்றிபெறுவோம்.

தேவன் இவ்வருடத்தின் துவக்கத்தில் ஒரு எச்சரிப்பாக ஊசாவை நமக்குக் காட்டியுள்ளார்.

இந்தப் புதிய ஆண்டில் பரிசுத்தமானதற்கு உரிய மரியாதை கொடுத்து பெரும் தண்டனைகளிலிருந்து தப்புவோம். நம்முடைய காரியங்களை, குறிப்பாக தேவனுக்கடுத்த செயல்களைப் பாரம்பரியத்தின்படி செய்யாமல், வேதம் வசனம் என்ன சொல்கிறதென்று, தேடிக் கண்டுபிடித்து அதன்படி செய்வோம். கீழ்ப்படியாமை என்ற பாவத்திற்கு நம்மை விலக்கிக் காத்துக்கொள்வோம்.

பரலோகத்தின் தேவன் தாமே இவைகளின்படி செய்ய உங்களைக் காத்து வழி நடத்துவாராக! ஆமென்.

ராஜநாயகம்.

## வேதாகமத்தின் நேர்த்தியான ஒற்றுமை

*வேதாகமத்தை எழுதி முடிக்க சுமார் 1600 ஆண்டுகள் ஆனது. 40 வித்தியாசமான எழுத்தாளர்களால் எழுதப்பட்டது. அவர்களுடைய பிண்ணனி வித்தியாசமானது. அவர்களுடைய கலாச்சாரங்கள் வாழ்ந்த தேசங்கள் அனைத்தும் வித்தியாசமானவைகள். அதிலும் குறிப்பாக அவர்களில் அதிகமான பேர் ஒருவரையொருவர் அறியாதவர்களாக இருந்தார்கள் இருந்த போதிலும், தேவனுடைய கரம் கண்காணித்ததினால் அவர்களால் நேர்த்தியாகவும் முழுமையாகவும் வேதாகமத்தை எழுதி முடிக்க முடிந்தது.*

# சிறந்த முன்னோடிகள் தேவை

ஒரு குடும்பம், பள்ளி, வியாபாரம் கடை அல்லது ஒரு நாடு ஆகியவை நன்கு இடங்க வேண்டுமானால் ஒரு தலைவர் தேவை. அது போல் சபைக்கும் கூட முன்னோடிகள் தேவை. ஏராளமான மக்கள் வீதிகளிலும், தெருக்களிலும் எந்த ஒரு நோக்கமில்லாமல் சுற்றி அலைந்து திரிவர். அவர்களையெல்லாம் ஒரு அண்யில் திரட்டி ஒரு கொடியின் கீழ் கொண்டு வந்து விட்டால் நல்லதுக்கும் பயன்படுவார்கள்; கெட்டதுக்கும் பயன்படுவார்கள். அது தலைமை ஏற்பவருடைய மனநிலையைப் பொருத்தது.

சபையைப் பொறுத்தவரையில் கிறிஸ்துவே தலை (கொலோ 1:18). உலகில் பல்வேறு பாகங்களில் பிராந்திய சபைகள் பரவிக்கிடக்கிறபடியால் அவைகள் ஒவ்வொன்றிற்கும் முன்னோடிகள் தேவை. பிராந்திய சபைகளிலும் கூட கிறிஸ்துவே ஆவிக்குரிய தலை. அவருடைய வார்த்தைகளடங்கிய வேதாகமத்தின் மூலமாக அவருடைய சித்தத்தை நிறைவேற்றவும் வழி நடத்தவும் செய்கிறார். ஆனால் அன்றாடப் பணிகளை மேற்பார்ப்பதற்கு மனித முன்னோடிகளும் தேவைப்படுகின்றனரே ! அதற்கு சில மனிதர்கள் உருவாக வேண்டும். அல்லது சபை உருவாக்க வேண்டும்.

ஆதி நாட்களிலே அப்போஸ்தலருக்கு “நீங்கள் உலகம் எஹ்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுஹ்கல்” என்ற கட்டளையோடு (மாற்கு 16:15,16) குணப்பட்டவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசங்களில் உறுதியாகத் தரித்திருந்தார்கள் என்றும் பார்க்கிறோம். ஆயினும் அப்போஸ்தலருக்குச் சொல்லப்பட்ட அனைத்துப் பணிகளையும் அவர்களால் செய்து முடிக்க முடியவில்லை. அவர்கள் எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் இருக்க முடியவில்லை. ஆகையால் அவர்கள் தங்களுக்கு உதவியாக சில மனிதர்கள் மேல் கை வைத்து சில அற்புத அடையாளங்கள் செய்யும் வரத்தையும் பகிர்ந்தளிக்க கர்த்தர் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அதன் மூலமாக குழந்தைப் பருவத்தில் இருந்த சபை தேவனுடைய உண்மையான வெளிப்பாட்டின் வழியாய் வேரூன்றி தழைத்து வளர முடிந்தது.

ஊழியம் வளர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் சபைகள் நிர்மாணிக்கப்பட்ட பொழுது அவைகளைக் கண்காணிக்கவும் நடத்தவும் மூப்பர்களும் அவர்களுக்கு உதவிக் காரர்களும் தேவைப்பட்டார்கள். (1 தீமோ

3:தீத்து 1) ஒரு ஊழியரோ அல்லது உள்ளூர் பிரமுகர் ஒருவரோ சர்வாதிகாரி போல் நடந்து கொள்ளா வண்ணம் பார்த்துக் கொள்வதற்கு ஒவ்வொரு சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் நியமிக்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட தகுதி வாய்ந்த மூப்பர்களும் உதவிக்காரர்களும் உருவாகும் வரை சபையின் காரியங்களை மேற்பார்ப்பதற்கும், பிரசங்கம், கர்த்தருடைய பந்தி, சபையின் பொருளாதாரக் காரியங்களை கவனிப்பதற்கும் சிலரை நியமிக்க வேண்டியதாயிருந்தது.

ஆரம்ப நாட்களில் அப்போஸ்தலர்கள் சில குறிப்பிட்ட மனிதர்களின் மேல் கை வைத்ததால் சிலர் அற்புத அடையாளங்களைச் செய்யும் ஆற்றல் பெற்று அவர்கள் சபையின் முன்னோடிகளாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் அநேகமாக மூப்பர்களுடைய ஸ்தானத்தில் பணியாற்றினார்கள். இவ்விதமான பரிசுத்த ஆவியின் சிறப்பு வரங்களின் மூலமாக அவர்களுடைய வேத அறிவு, ஞானம், விசுவாசம் முன் மாதிரியான வாழ்க்கை என்று பல் வகையிலும் அவர்கள் சிறந்து விளங்கினார்கள். இவைகள் எல்லாம் இருந்தாலும் அவர்கள் ஒரே மனைவியையுடையவர்களாகவும் விசுவாசிக்கிற பிள்ளைகள் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற நியதியையும் பின்பற்றினார்கள். பரிசுத்த ஆவியின் அனுக்கிரகம் அவர்களுக்குத் துணை நின்றதால் குறுகிய காலத்தில் அவர்கள் மூப்பர்களுடைய தகுதியடைந்தார்கள். சபையும் பலுகிப் பெருகிற்று.

அன்றைக்கு அப்போஸ்தலராக அழைக்கப்பட்டவர்கள் யாரும் இன்றைக்கு நம்மிடையே உயிரோடில்லை. பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்றவர்களோ, அப்போஸ்தலர்கள் கை வைத்ததினால் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றவர்களோ கிடையாது. ஆகையால் மூப்பர்களுக்குரிய தகுதிகளை விரைந்து பெற்றுக்கொள்வதற்குரிய வாய்ப்புகள் குறைவு. மூப்பர்களுக்குள்ள தகுதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு காலமும், பயிற்சியும் தேவைப்படுகிறது.

மூப்பர்களைக் கொண்ட சபைகள் இருப்பது விரும்பத்தக்கது. ஏனெனில் வேதாகமம் ஒரு சபை பூரணமடைவதற்கு மூப்பர்களும் உதவிக்காரர்களும் தேவை என்று குறிப்பிடுகிறது. தகுதியில்லாத மக்களை பேருக்காக மூப்பர்களாக ஏற்படுத்திவிடக்கூடாது. அதற்குரிய உண்மையான தகுதியுடையவர்கள் இரண்டு மூன்று பேராவது உருவாகும் வரை சபைக் காரியங்களைக் கவனிப்பதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்வது நல்லது. ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் மூப்பர்களுக்கு

இன்னின்ன தகுதிகள் வேண்டும் என்று குறித்திருப்பது விளையாட்டுக்கல்ல. அதற்கு ஒரு பெரிய நோக்கம் உண்டு. ஆகவே மாற்று ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும் என்பதை நிரந்தரமாக்கி விடாமல் விரைவில் அத்தகைய தகுதிகளை வளர்த்துக் கொள்வதற்கு ஒவ்வொரு அங்கத்தினரும் முயல வேண்டும்.

1 தீமோ 3ம் அதிகாரத்திலும் தீத்து 1–ம் அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிற தகுதிகளில் பெரும்பாலானவைகளை (ஒரே மனைவியையுடைய கணவன் விசுவாசமுள்ள குழந்தைகள், போதிக்கும் ஆர்வம் நூதன சீஷனாயிராமை நீங்கலாக) அடைய ஒவ்வொரு கிறிஸ்தவனும் (ஆண்களும், பெண்களும்) முயல வேண்டும். காலம் செல்லச் செல்ல இதர தகுதிகளையும் அடைய முடியும். பெண்களும் கூட ஒரே மனைவியையுடைய கணவன் என்ற காரியம், ஆண்களும் அடங்கியுள்ள கூட்டத்தில் பிரசங்கித்தல் ஆகியவை தவிர மற்ற காரியங்களில் தேர்ச்சி பெறலாமே ! வேத வசனங்களில் தேர்ச்சியடைந்துள்ள பெண்கள் சகோதரிகள் மற்றும் சிறு பிள்ளைகள் அடங்கிய கூட்டத்தில் போதிக்கலாம்.

மூப்பர்களாகும் தகுதியை பெண்களுக்கு வேதாகமம் விலக்கிவைத்திருக்கிற காரணத்தை அறிய உங்களுக்கு ஒரு வேளை ஆவல் இருக்கும் பெண்கள் விஷயத்தில் பாரபட்சம் காட்டுகிறார் என்று சொல்லலாமா? அல்லது பெண்கள் ஆண்களைப் போல முக்கியமானவர்கள் அல்ல என்பதாலா? அப்படியெல்லாம் நினைத்துக் கொண்டு தேவனுடைய திட்டத்தை தவறாக அர்த்தம் கொள்ளக் கூடாது. வேதாகமத்தை ஊன்றிக் கவனித்துப் பார்த்தால் ஆண்களுக்கும் பெண்களுக்கும், வித்தியாசமான பணிகளை ஒதுக்கியிருக்கிறார் என்பது தெரியவரும். அப்படி அவர் வரையறுத்து வைத்திருப்பதற்கு ஒரு நோக்கம் உண்டு. நாம் எல்லோரும் ஒன்றை நினைவில் கொள்ல வேண்டும். கர்த்தர் சர்வ ஞானமுள்ளவர். அவருடைய காரியங்களைச் சந்தேகிப்பதோ கேள்வி கேட்பதோ தகாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் நமக்கு ஒப்புவிக்கப்பட்ட பணிகளைச் செவ்வையாய் செய்வது தான். அவ்வாறு நாம் நம்முடைய கடமைகளை நிறைவேற்றும் போது அவருடைய சித்தம் நிறை வேறும். நாம் ஒவ்வொருவரும் நமக்கேற்ற ஆசீர்வாதங்களைப் பெறுவோம்.

பிராந்திய சபையில் உள்ள ஆண் அங்கத்தினர்கள் எல்லோருமே மூப்பர்களாகும் தகுதியை அடைய முயல வேண்டும். என்று பவுல் அறிவுறுத்துகிறார். நீங்கள் அப்படி செய்வது ஒரு நல்ல வேளையை விரும்புவதாகப் பொருள். நீங்கள் அப்படிப்பட்ட நல்ல வேளையை விரும்பாமற்

போனால் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள ஒரு நாளும் சம்மதிக்கக் கூடாது. ஏனெனில் உண்மையாகவே அது ஒரு பெரிய வேலை; மகத்தான பொறுப்புள்ளது. மனிதனால் மெச்சிக்கொள்ளப்படுவதற்கு யாரும் மூப்பராகக் கூடாது. ஆனால் அந்தப் பணிக்கு வர விரும்புகிறவர்கள் சபையின் உயர்வுக்காகப் பாடுபடவேண்டும். சேவை செய்ய வேண்டும். தன்னுடைய நேரத்தை சபை வேலைக்கு அர்ப்பணிக்க வேண்டும், மற்றவர்களை நேசிக்க வேண்டும், மக்களோடு இணைந்து பாடுபட வேண்டும், ஆன்மாக்களை நேசிக்க வேண்டும், அவர்களுடைய இரட்சிப்புக்காகப் பாடுபட வேண்டும்.

மூப்பர்கள் பிராந்திய சபைக்கு முன்னோடியாக இருக்க வேண்டும். அவர்கள் மந்தைகளைக் கண்காணிக்க வேண்டும். உறுப்பினர்களை ஆவியில் வளர உணவூட்டவேண்டும். அவர்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். பலவீனர்களைத் தாங்க வேண்டும். சத்தியம் போதிக்கப்பட வேண்டும். கள்ளப் போதகங்களைத் தோலுரித்துக் காட்ட வேண்டும். தேவன் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட வேலையை செய்ய வேண்டும். இம்மாதிரியான தலைமையினால் சபை வலுவடையும் வளர்ச்சி அடையும், முன்னேறும்.

ஒவ்வொரு பிராந்திய சபையிலும் மூப்பர்கள் இருப்பது நல்லது. இம்மாதிரியான தலைமைத்துவத்தை உருவாக்குவதற்கு உலகெங்கிலும் பயிற்சிகள் தரப்பட வேண்டும். இதுதான் இங்கேயும் சரி வேறெங்கிலும் சரி சபை வளர்ச்சிக்கு தேவனுடைய ஆலோசனை, இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டால் மனித ஞானத்தால் உருவாக்கப்பட்ட எந்த முறையைக் காட்டிலும் சிறந்த பலன் கிடைக்கும்.கிறிஸ்துவின் சபை ஓங்கி வளரும்.

J.C. சோட்

## தேவ தூதர்கள்

*காபிரியேல் எப்பொழுதும் நல்ல செய்தியைக் கொண்டு வரும் தூதன்*

*மிகாவேல் எப்பொழுதும் அதிர்ச்சியான செய்தியைக் கொண்டு வரும் தூதன்.*

# பெண்கள் பகுதி

இயேசு கிறிஸ்துவின் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றும் மிக மிக முக்கியமான வார்த்தைகள் ஆகும். முதலாம் நூற்றாண்டில் இவ்வார்த்தைகள் எவ்வளவு தேவையானதாக இருந்ததோ அதைக் காட்டிலும் இன்று நம் குடும்பத்திற்கு இந்த ஜீவ வார்த்தைகள் தேவையாக இருக்கிறது. நம் குடும்பத்தை வழி நடத்தி செல்வதற்கு இந்த வார்த்தைகள் வழிகாட்டியாக இருக்கிறது. ஒவ்வொரு மனைவியும், தாய்மார்களும் கிறிஸ்துவை தேவனாகவும் இரட்சகராகவும் அறிந்திருத்தல் அவசியம். வெற்றியுள்ள திருமணங்கள் மகிழ்ச்சியான இல்லற வாழ்வு, தேவனுக்கு பயப்படும் அருமையான குழந்தைகள் இவையனைத்தும் கிறிஸ்துவை தங்கள் இல்லத்தில் ஒருவராக கொண்டிருப்பவர்க்கே கிடைக்கிறது.

இன்றைக்கும் நாம் பின்பற்றக்கூடிய நல்ல பெண்மணிகளை வேதாகமத்திலிருந்து அடையாளம் காண முடியும். தங்கள் கணவன்மார்களை மரியாதை செய்து, போற்றி, அன்பு செலுத்தும் நல்ல மனைவிகளே இன்றைய தேவை. I பேதுரு 3:5–6 ஆகிய வசனப்பகுதியில், "இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்.

அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்கு கீழ்ப்படிந்திருந்தாள். நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்கு பிள்ளைகளாயிருப்பீர்கள்." என்று பூர்வ கால ஸ்திரீகளின் குணங்கள் விவரிக்கப்படுகின்றது. இந்தப் புத்தாண்டிலே நமக்கு பிரயோஜனமாயிருக்கும் வகையில் சில பூர்வ கால ஸ்திரீகளைப் பற்றி ஆராய்வோம் வாருங்கள்.

### *வஸ்தி என்ற இளவரசி*

பழைய ஏற்பாட்டில் எஸ்தர் புத்தகம் முதலாம் அதிகாரத்தில் வஸ்தி என்ற இராஜஸ்திரீயைப் பற்றி வாசிக்கிறோம். தன் கண்ணியத்தை காத்துக் கொண்டதின் மூலமாக தன்னை நிலை நிறுத்திக் கொண்ட ஒரு ஸ்திரீ. அவள் கணவனாகிய அகாஸ்வேரு ராஜா தேவனுக்கு விரோதமான ஒரு வேண்டுகோளை பிறப்பிக்கிறான் (எஸ்தார்1:10–11) தான் ராணியாக இருப்பதைக் காட்டிலும் தன் கண்ணியத்திற்கு அதிக விலை கொடுத்தாள். ஒரு குடிகார

ராஜாவை சந்தோஷப்படுத்துவதற்கு தன்னை அவள் ஒத்து கொள்ளவே இல்லை ராணியாய் இருப்பதை அவள் மேன்மையாக கருதவில்லை இன்றைக்கும் கண்ணியத்தையும், தூய்மையையும் காக்கக் கூடிய மனைவிகளாக தாய்களாக நாம் திகழ வேண்டும்.

### யோகெபேத்:

மோசே, ஆரோன், மிரியாம், இவர்களின் தாய் இவள் எபிரெயர் 11:23ல் இவளுடைய விசுவாசத்தின் அளவு விவரிக்கப்பட்டுள்ளது. "மோசே பிறந்தபோது அவனுடைய தாய் தகப்பனார்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே ராஜாவினுடைய கட்டளைக்கு பயப்படாமல் அவனை மூன்று மாதம் ஒளித்து வைத்தார்கள்." பார்வோனின் அரண்மனையில் கொஞ்சக்காலமாத்திரமே அவள் மோசேயுடன் இருந்தாள் இருப்பினும் மோசேக்கு இருந்த நற்பண்புகளை உருவாக்கியதில் அவளுக்கு பெரிய அளவு தாக்கம் இல்லாமல் இல்லை. இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வழி நடத்திச் சென்ற பழைய ஏற்பாட்டின் நாயகனான மோசேயைப் போன்ற வாலிபர்கள் இன்று தேவை அவர்களை உருவாக்க நல்ல விசுவாசமுள்ள யோகெபேத் போன்ற தாய்மார்களால் தான் முடியும்.

### அன்னாள்:

இவள் சாமுவேலின் தாய். I சாமுவேல் 1,2 ஆகிய அதிகாரங்களில் நாம் அன்னாளைப் பற்றி வாசிக்கிறோம். முழுமனதோடு அவள் தேவனிடத்தில் ஒரு குழந்தைக்காக மன்றாடினாள். அவள் மனம் தளரவில்லை தேவன் அவள் விண்ணப்பத்திற்கு செவி கொடுத்தபோது அவள் தேவனோடு செய்த பொருத்தனையை மறந்துவிடவில்லை. சாமுவேலை மிகவும் அன்போடு பாதுகாத்து சரியான சமயம் வந்தபோது தேவனுடைய சமூகத்தில் ஒப்பு கொடுத்துவிட்டாள் தான் ஒரு தாயாக வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அதற்காக கண்ணீர் வடித்தாள். அவள் ஒரு ஜெப வீராங்கனை. தேவனோடு ஜெபத்தில் உறவு கொள்ளாமல் நாம் எப்படி நம் பிள்ளைகளை வளர்க்கமுடியும்? நம்முடைய பிள்ளைகள் தேவனால் நமக்கு கடனாக கிடைக்கப் பெற்றவர்கள் தான். தாய்மார்களாகிய நாம் நம் பெண் குழந்தைகளையும், ஆண் குழந்தைகளையும் தேவபயத்தோடு வளர்க்க தவறினோமானால் நாம் அவர்களை கடைசிவரை இழந்தவர்களாகவே காணப்படுவோம். அவர்களாலே நமக்கு சமாதானமே கிடைக்காது. நாம் செய்ய வேண்டிய ஒரே ஒரு காரியம் அன்னாளைப்போல நம் பிள்ளைகளை தேவ சமூகத்தில் ஒப்படைத்து விடுவோம்.

## நோவாவின் மனைவி:

தன் கணவனாகிய நோவாவோடு 120 வருடங்கள் பக்க பலமாக இருந்தாள். தன்னை சுற்றி இருந்த உலகம் அவர்களை கேலி செய்து, நகைத்து இருப்பார்கள். மழை வரும் என்ற சொல்லை நம்பாமல் இருந்தார்கள். துன்மார்க்கம் நிறைந்த அன்றைய உலகில் நோவாவின் குடும்பம் நீதியாக வாழ்ந்து வந்தது. ஒருவேளை நாம் அந்த நிலையில் இருந்திருந்தால். உலகம் போகிற போக்கிலே போய் கணவன்மார்களையும் திசை திருப்பிவிட்டிருப்போம். மிகுந்த ஊக்கத்தோடு தன் கணவனுடன் நின்று பேழைக்குள் சென்று தன்னையும், தன் குடும்பத்தையும் இரட்சித்து கொண்டாள்.

நோவாவின் மனைவியைப் போல் ஞானத்தோடு நடப்போம். பிள்ளைகளை இரட்சிப்பதில் கவனம் செலுத்துவோம்.

## எலிசபெத்

யோவான் ஸ்நானகனின் தாயார் எலிசபெத். (லூக் 1 ம் அதிகாரம் 6ம் வசனத்தில் "அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்". எலிசபெத் தாய்மையடைவதற்கு முன்பே நீதியுள்ளவளாக காணப்பட்டாள். லூக் 1:43–ல் பார்க்கும்போது மரியாளின் வயிற்றில் உள்ள குழந்தையை "என் ஆண்டவரே" என்று அழைக்கிறாள். பிறக்காத குழந்தை அவளுக்கு ஆண்டவராய் இருந்தார். யோவானின் தாயாக இருக்கும் சிலாக்கியம் எலிசபெத்துக்கு கிடைக்கிறது. அவளுடைய உள்ளமும், அவளது வாழ்வும் தேவனுக்கு முன்பாக நீதியாயும் நியாயமாகவும் காணப்பட்டது.

எலிசபெத் போன்று இயேசு கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக் கொண்டு ஆசீர்வாதமான மக்களைப் பெற்று வளர்க்க கர்த்தர் கிருபை செய்வாராக.

மரியாள்: இயேசு கிறிஸ்துவினுடைய தாய் மரியாள். அந்த நாட்களில் வாழ்ந்த அனைத்து ஸ்திரீகளையும் தேவன் அறிந்திருந்தார். ஆனால் அவர்கள் எல்லோரையும் விட மரியாளை தேர்ந்தெடுத்துக் கொண்டார். அவளிடமிருந்த நல்ல குணாதிசயங்களை அவர் அறிந்திருந்தார். மரியாள் இயேசு கிறிஸ்துவுடைய தாயாக மட்டுமல்ல, அவரைப் பின் தொடரும் ஒரு சீஷியாகவும் இருந்தாள் என்று பார்க்கிறோம். இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்ற, தன் ஒரே பேரான குமாரனை அனுப்புவதற்கு பெண்ணையே தெரிந்தெடுத்தார். அதே

போல் அந்தக் குமாரன் இவ்வுலகத்திற்கு வந்த நோக்கத்தை நிறைவேற்ற இன்னமும் அவர் பெண்களையே அதிகம் சார்ந்திருக்கிறார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்து தன் சொந்த இரத்தத்தை விலையாகக் கொடுத்து சம்பாதித்து மீண்டும் வந்து தன்னோடு அழைத்துச் செல்லும், அந்த மாபெரும் சபை என்ற ஸ்தாபனத்தை அடையாளம் கண்டு வேதத்தின் துணைகொண்டு அந்த சபைக்காக நாம் ஆற்ற வேண்டிய சேவைகளை செய்து நம் குடும்பத்தையும் இரட்சித்துக்கொள்வோம்.

இதை வாசித்திருக்கும் தாய்மார்களே! சகோதரிகளே! முத்தான ஸ்திரீகள் ஆறுபேரைப்பற்றி சுருக்கமாகப் பார்த்தோம். நம்மிடையே இந்த நற்பண்புகள் உள்ளனவா? என்று சற்றே ஆராய்வோம்! வீணாக கழித்த நாட்கள் போதும்! தேவன் கிருபையாய் கூட்டிக் கொடுத்த இந்தாண்டிலே வேதம் விரும்பும் பெண்களாக வாழ முயற்சிப்போம்! வேத வசனங்களை ஆராய்ந்து படிப்போம்! முழங்கால்களை ஊன்றி போராடி ஜெயிப்போம்!!! மிச்சமானவைகளை தேவன் பார்த்துக் கொள்வார். ஆமென்.

ரேச்சல் இராஜநாயகம்

## தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேறுதல்

1. உன்னை பெரிய ஜாதியாக்குவேன் என்ற வாக்குத்தத்தம் நிறைவேறியது (இஸ்ரவேல் மக்கள்)
2. இந்த தேசத்தைக் கொடுப்பேன் என்ற வாக்குத்தத்தம் நிறைவேறியது (கானான் தேசம்)
3. உன் சந்ததிக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்ற வாக்குத்தத்தம் நிறைவேறியது. (இயேசு கிறிஸ்து - கிறிஸ்தவர்கள்)
4. தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களில் நிறைவேறாதது ஒன்றுமில்லை. (எல்லாம் நிறைவேறியது)

# *Invitation*

*Dear . . . . . . . . . . . . . . .*

*We solicit your earnest prayers and esteemed presence to share the Joy of the*

*Opening Ceremony of the*

**"Church Meeting Hall"**

*and*

**The graduation of the First Batch Students of the World Video Bible College**

*On Saturday the 8th February 1997*

*at 8.30 a.m.*

Venue : CHURCH OF CHRIST PREMISE
195, Dharapuram Road,
KANGAYAM - 638 701. INDIA
© 04257 – 20030

Director, Staff, Students
**WVBC,**
KANGAYAM

Members
**Church of Christ**
KANGAYAM

# நான் ஏன் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராக இருக்கிறேன்?

***ஏனென்றால் இந்த சபையானது ஆவிக்குரிய வசனத்தின் படியாக கிறிஸ்துவே இதை ஸ்தாபித்தவர் :***

எல்லா மத அமைப்புகளும் யாராவது ஒருவரால் கண்டிப்பாக ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும் இது உண்மை. இன்றைய உலகத்தில் ஏராளமாக, எண்ணிக்கையற்ற சபைகள் காணப்படுகிறது. இவைகள் ஒவ்வொன்றின், ஆரம்பத்திலும், கொள்கையிலும், செயல்முறைகளிலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டு காணப்படுகிறது. ஆகவே, இவைகள் வேதவசனத்தின்படியாகவோ அல்லது மனித சித்தத்தின் படியாகவோ கண்டிப்பாக ஸ்தாபிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆகவே எந்தவொரு சபையும் வேத வசனத்தின் படி ஏற்படுத்தப்பட்டதா? (Or) வேதவசனத்தின்படியல்லாமல் ஸ்தாபிக்கப்பட்டதா? என்று நாம் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒரு வேளை ஒரு சபை வேத வசனத்தின்படி ஏற்படுத்தப்படவில்லையென்று சொன்னால் கண்டிப்பாக அந்த சபை மனித முயற்சியினால் ஸ்தாபிக்கப்பட்ட சபையேயன்றி கிறிஸ்துவினால் அது ஸ்தாபிக்கப்பட்டதல்ல.

**II. *கிறிஸ்து வசனத்தின்படியான சபையை கட்டினார்.***

1. இந்த வார்த்தையை நாம் உறுதிபடுத்த கிறிஸ்துவின் வசனத்தை நாம் இங்கே பார்ப்போம், அதில் அவர் 'சபையை நான் கட்டுவேன் என்று வாக்குறுதியளித்தார். "இந்தக் கல்லின் மேல் என் சபையை கட்டுவேன்" (மத் 16 : 18) இதன் மூலம் எந்த ஒரு சபையும் கிறிஸ்துவினால் ஸ்தாபிக்கப்பட வில்லையோ அந்த சபை வசனத்தின்படியான சபையல்ல என்பது நிச்சயமாகிறது. ஒருவேளை சபையானது எட்டாம் ஹென்றியினால், ஜான் கால்வினினால், ஜான் வெஸ்லியினால் ஜோசப் ஸ்மித் Jr. (or) ஏதோவொரு மனுஷனால் ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் சந்தேகமேயில்லை அவைகளெல்லாம் மனுஷ சித்தத்தினால் ஆரம்பிக்கப்பட்ட (ஸ்தாபிக்கப்பட்ட) சபைகளே.

2. இயேசு தம்முடைய சபையை கட்டுவேன் என்று வாக்களித்த பொழுது அந்த சபைக்குள்ளே அனுமதிக்கக் கூடிய அதிகாரத்தை பேதுருவுக்கு கொடுத்தாரென்று நாம் பார்க்கிறோம்; "பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை

நான் உனக்குத் தருவேன். பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்" (மத். 16 : 19) எந்தவொரு மனுஷனுக்கும் இப்படிப்பட்ட வசனத்தின் படியான அதிகாரத்தை நாம் காண முடியாது. ஏனெனில் பூமியிலே வசனத்தின்படியான ஒரு சபையை ஸ்தாபிக்க எந்தவொரு மனுஷனுக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இயேசு, ஒருவருக்கே பரலோகத்திலும் பூலோகத்திலும் சகல அதிகாரமும் "சபையை கட்ட" சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் தான் ஆண்டவராகிய "இயேசு கிறிஸ்து".

### III. *சபையானது யோவான் ஸ்நானகனால் கட்டப்பட்டது அல்ல :*

1. அநேக மதவாதிகள் சபையானது யோவான் ஸ்நானகனால் ஸ்தாபிக்கப்பட்டது என்று வாதிடுவார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவாலேதான் சபை ஸ்தாபிக்கப்பட்டது என்பது மறுக்கமுடியாத உண்மை. நிச்சயமாக யோவான் ஸ்நானகனாலோ (or) வேறெந்த மனுஷனாலோ அது ஸ்தாபிக்கப் படவில்லை.

2. இயேசு நம்முடைய சபையை கட்டுவேன் என்று சொன்னபொழுது யோவான் ஸ்நானகன் மரித்துவிட்டார் (மத் 14 : 10) நாம் யோவானுடைய சிரச்சேதத்தை இப்படியாக வாசிக்கிறோம், "ஆள் அனுப்பி, காவற்கூடத்திலே யோவானை சிரச்சேதம் பண்ணுவித்தான்". நாம் நம்முடைய மனதிலே இதை வைத்துக் கொள்ள வேண்டும் இதற்கு பிறகு இரண்டு அதிகாரங்கள் தள்ளி மத் 16 : 18ல் கிறிஸ்து 'தம்முடைய சபையை கட்டுவேன்' என்று எதிர்காலத்தில் குறிப்பிடுகின்றார். யோவான் ஸ்நானகன் தேவனால் அனுப்பப்பட்ட மனுஷன்தான் அவர் கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணுகிறவராக வந்தார். (ஏசாய 40 : 3; மத் 3 : 1; 1 : 7). யோவான் இதை நிறைவேற்றினார். ஆனால் யோவான் மனிதர்களுக்குத் தெரிந்த (or) வேதாகமத்தில் காணப்படுகிற எந்த சபையையும் அவர் கட்டவில்லை.

3. இயேசு, யோவானால் அடிக்கல் நாட்டப்பட்ட சபையையே கட்டினார் என்று சிலர் வாதிடுவார்கள். ஆனால் அந்தக் கூற்று உண்மையல்ல காரணம் இயேசு தம்முடைய சபையை அடித்தளத்திலிருந்தே கட்டப் போதாக கூறினார். . . . இந்தக் கல்லின் மேல் என் சபையை கட்டுவேன் . . . .

4. யோவான் ஸ்நானகன் சபையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை பரலோக ராஜ்யத்தில் ஒரு பிரஜையாகவும் அவர் இல்லை. இயேசு சொன்னார்,

"ஸ்திரீயினிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோக ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்" (மத் 11 : 11). யோவான் ஸ்நானகன் ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர்களில் பெரியவன். ஆனால் பரலோக ராஜ்யத்தில் சிறியவன் யோவான் ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரியவன். இது எப்படியென்றால்.

"பள்ளி கூடத்தில் John என்பவனை விட பெரியவன் ஒருவனும் இல்லை. ஆனாலும் உயர்நிலைப் பள்ளியிலுள்ள கிறிஸ்தவனோ John–லும் மிகப்பெரியவன். இது உண்மை எப்படியெனில் John உயர்நிலைப் பள்ளியில் இல்லை. அதைப் போலவே யோவான் ஸ்நானகனே சபையில் (or) ராஜ்யத்தில் இல்லை. ஆகவே சபையில் இருக்கும் சாதாரணமானவர்கள் யோவான் ஸ்நானகனை விட பெரியவர்கள்.

**IV *பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடு பிடுங்கப்படும்.***

'கிறிஸ்துவின் சபை' கிறிஸ்துவினால் ஸ்தாபிக்கப்பட்டது பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. ஆனால் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடு பிடுங்கப்படும். இந்த எச்சரிக்கையானது வெளிப்படையானது ஒரு எச்சரிக்கை அதே சமயம் இது மிகவும் கடுமையான ஒரு எச்சரிக்கையும் கூட, ஏனென்றால் நான் பரமபிதாவினால் நடாத நாற்றாக நான் இருப்பேனேயாகில் வேறோடு பிடுங்கப்படுவேன் (மத் 15 : 13). மோசேயினுடைய சட்ட திட்டக் காலத்தில் தேவன் எபிரேய மதத்தை ஸ்தாபித்தார் (நட்டார்) மற்ற மனுஷன் நடப்பட்ட நாற்றெல்லாம் (மனுஷ சித்தத்தின்படியான வழிபாடுகள் கோட்பாடுகள்) வேரோடு பிடுங்கப்பட்டது. ஒருவேளை அந்தக் காலத்தில் தேவனாகிய கர்த்தர் தாம் நடாத நாற்றையெல்லாம் (வழிபாட்டுமுறை, கொள்கை, கோட்பாடுகள்) வேரோடு பிடுங்கினாரென்றால் தற்போதுள்ள கிறிஸ்தவத்தின் நிலை என்ன? நாம் நிச்சயமாக உணர்ந்து கொள்ளவேண்டும். தேவனுடைய தரம் இன்றைக்கும் குறைந்துவிடவில்லை. தேவன் பரிசுத்தர், தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார். தேவனுடைய எச்சரிக்கை மோசேயினுடைய காலத்திலும் சரி கிறிஸ்துவின் யுகத்திலும் சரி ஒரே அளவாகத்தான் காணப்படுகிறது. நாம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற எச்சரிக்கையை நன்கு கவனித்து பார்த்து ஜாக்கிரதையாய் சபையை நாடுவோமாக. எந்தச் சபையை? வேதத்தினடிப்படையிலான "கிறிஸ்துவின் சபையை".

*தானியேல் துரைராஜ்*
*திருச்சி.*

# சபை கூடிவருவது மிக அவசியமா?

"ஆராதனையில் பங்கு பெறவேண்டியது அவ்வளவு முக்கியமான காரியமா? நமக்கு பல வேலைகள் உள்ளன; நிறைய வேலைப் பளுவின் காரணமாக அதிக களைப்பாகவும் இருக்கிறது. என்றாலும் சபை கூடிவருவது முக்கியம் என்றால் நல்லது தான்; ஆனாலும் அது எவ்வளவு முக்கியமானது என்று தெரிந்து கொள்ளலாமா?" – முற்றிலும் நேர்மையான ஒரு மனிதனின் கேள்வி இது.

கர்த்தருக்கு அது முக்கியம் : சபை கூடி வருதல் ஒன்றையும் ஒருபோதும் அவர் தவற விடுவதில்லை. பிறரும் அதை தவற விடக் கூடாது என அவர் வற்புறுத்துகிறார். (மத்தேயு 18 : 20; எபிரேயர் 10 : 25).

நீ நேசிப்பவர்களுக்கு அது முக்கியம் : பத்து லட்சம் வார்த்தைகளை விட உன் விசுவாசமும் முன்னுதாரணமும் உரக்க ஒலிக்கின்றன. சபையை நீ நேசிப்பதை விட உன் குழந்தைகள் அதிகமாக நேசிக்காமல் இருக்கக் கூடும். எனவே, உனது முன்மாதிரியான நடவடிக்கைகள் பிறருக்கு மிகவும் அவசியமாகும்.

உனது அயலானுக்கு அது அவசியம் : நாம் கூறும் செய்திகளைக் காட்டிலும், நமது செயல்களே மேலோங்கி நிற்கின்றன. "வாழ்க்கை நெறிமுறைகளில் அவர் எவ்வளவு உறுதியானவர்?" என்ற கேள்வியே உனது விசுவாசத்திற்கு அவர்களுடைய முதல் சோதனை.

சபைக்கு அது அவசியம் : கிறிஸ்தவர்கள் ஆராதனையை அலட்சியப்படுத்தி அதில் கலந்து கொள்ளாமலிருக்கும் போது சபையின் ஒவ்வொரு காரியத்திற்கும் இடைஞ்சலாகிறது. எவ்வளவு அருமையான பிரசங்கமும் உனது காலி இடத்தை அசைக்க இயலாது.

மூப்பர்களுக்கும் ஊழியர்களுக்கும் அது முக்கியம் : சபையை உற்சாகப்படுத்தி விசுவாசத்தில் நிலைநிறுத்த முயற்சிக்கும் இவர்களுக்கு பெரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவிசுவாசம் இவர்களைக் குழப்பவும் கலக்கமடையவும் செய்யும். உங்களுடைய விசுவாசமானது, வார்த்தைகளால் சொல்லும் அளவிற்கும் அதிகமாக, அவர்களின் சுமையைத் தாங்க உதவும் பெரியதோர் வித்தியாசத்தை உண்டாக்குகிறது.

உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அது அவசியம் : கிறிஸ்தவர்கள் என்றால் சீடர்கள், அதாவது பின்பற்றுவோர், கற்றுக் கொள்வோர், அல்லது மாணவர்கள். அடிக்கடி பள்ளிக்குச் செல்லாத மாணவன் தேர்வுகளில் தவறி விடுவது போல, ஆராதனைக்குத் தவறுவது ஆவிக்குரிய முன்னேற்றத்தையும் வெற்றியையும் தடைசெய்கிறது. தேவனுக்கு அது முக்கியம் : தமது குமாரனையே தந்தருளி அக்கறை காட்டியவர், நீ எப்படி அவர் பேரில் அக்கறையுள்ளவனாக இருக்கிறாய் என்பதில் மிகவும் உணர்ச்சிமிக்கவராக இருக்கிறார் என்பதை நீ நிச்சயமாக நம்பலாம்.

நீ மனப்பூர்வமாக பங்கு பெற வேண்டியது மிகவும் அவசியம். உன் ஆத்தும நலனுக்காகவும் பிறர் அனைவரின் ஆத்தும நலன்களுக்காகவும், கிறிஸ்தவத்தின் முக்கியமான பகுதியாகிய சபை கூடி வருதலை அலட்சியப்படுத்தாதே.

தமிழில் : எஸ்.எஸ். ராஜன்.

## யூதர்களுடைய குடும்ப வாழ்க்கை

1. *குடும்பமே எல்லாவற்றிற்கும் மையமானது*
2. *குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் ஆழ்ந்த பயபக்தியுடன் இருந்தனர்.*
3. *அவர்கள் ஒவ்வொரு முறையும் சாப்பிடும் போது தேவனுக்கு நன்றி தெரிவித்து சாப்பிட்டனர்.*
4. *குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் சேர்ந்து அமர்ந்து ஒன்றாக சாப்பிடுவார்கள்.*
5. *குடும்பத்திலே குழந்தைகள் பிறந்தால் அது தேவனால் கொடுக்கப்பட்ட மிகப் பெரிய ஆசீர்வாதமாக எண்ணினர்.*

## பிரசங்கியர் பகுதி

# பிரசங்கத்திற்கு முன் பிரசங்கி நினைவுபடுத்திக்கொள்ள வேண்டியவைகள்.

பிரசங்கம் செய்வதற்கு முன்பு ஒரு பிரசங்கி நினைவுபடுத்திக் கொள்ளவேண்டிய விசயங்கள் இருக்கின்றன. இவைகள் பிரசங்கத்திற்கும், பிரசங்கத்தைக் கேட்கிறவருக்கும் பயனுள்ளதாக இருக்கிறது. வெறும். பிரசங்கத்தைக் கேட்பவர்களைவிட பிரசங்கியின் ஜீவியத்தைப் பார்க்கிறவர்களே அதிகம். ஆதலால் பிரசங்கி தனது பிரசங்கத்திற்கு முன்பு சிந்தித்து செயல்பட வேண்டிய விசயங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

***1. பிரசங்கி மெய்யாய் குணப்பட்டவராக இருக்க வேண்டும் :***

பிரசங்கம் செய்வது சுலபம் ஆனால் அதின்படி நடப்பதோ சுலபமான தல்ல! ஆதலால் தான் “அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக” என்று வேதவாக்கியம் எச்சரிக்கிறது. (யாக் 3 : 1) இதன் அர்த்தம் போதகர் ஆகவேண்டாம் என்றல்ல போதிக்கிறவர் அதின்படி செய்கிறவராக இருக்க வேண்டும் என்கிற கருத்தையே வலியுறுத்துகிறது. (வச. 2) நம் ஆண்டவர் தமது இளம் பிராயத்திலே தான் ஊழியத்தை மேற்கொண்டு போதிக்கவும், அதின்படி செய்யவும் இருந்தார். (அப் 1 : 2) அதே மாதிரிகளாக அப்போஸ்தலர்களும் இருந்தனர். (2 தெச 3 : 7, 9)

பிரசங்கி, மற்றவர்களைப் பார்த்து பாவத்திலிருந்து குணப்படுங்கள், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்படியுங்கள், கிறிஸ்துவின் சபையில் ஞானஸ்நானம் பெற்று ரட்சிக்கப்படுங்கள் . . . என முழக்கினாலும் தான் அதின்படி செய்யாமல் இருக்கும் வரைக்கும் அவ்வார்த்தைகளுக்குப் பெலனில்லை! சுவிசேஷத்திற்கு கீழ்படிகின்ற தான் குணப்படுத்தலில் முதல் மாதிரியாக பிரசங்கியே இருக்கிறார். (1. கொரி 15 : 1 –3) நம் ஆண்டவர் வெளிச்சமாயிருந்ததினால் அநேகரை வெளிச்சத்திற்குள் கொண்டுவர முடிந்தது. (மத் 4 : 15) அது போலவே பிரசங்கியும் வெளிச்சமாக இருக்க வேண்டும். தான் வெளிச்சமாயிருந்தால் தான் மற்றவர்களை வெளிச்சத்தின் பிள்ளைகளாய் மாற்ற முடியும். மற்றவர்களுடைய இருதயங்களில் தேவ பக்தி அனல்மூட்ட பிரசங்கியே

பலி பீடத்திலிருந்து எடுக்கப்பட்ட முதல் தழலாக இருக்க வேண்டும். (ரோ. 12 : 11) பிரசங்கி பிரகாசமாக இருக்கவில்லை என்றால் மற்றவர்களை பிரகாசிக்க முடியாது. (எபே 5:14). பிரசங்கி தனது சுய பக்தியில் அனலுமின்றி, குளிருமின்றி இருந்தால் மற்றவர்களை எப்படி அனல் மூட்டுவது? ஆகவே பிரசங்கி மெய்யாய் குணப்பட்டவராக, ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு முதல் சுடராக பிரகாசிக்க வேண்டும். (பிலி 2 : 14).

**2. *பிரசங்கி, வேதவாக்கியங்களை நன்றாய் அறிந்தவராயிருக்க வேண்டும்***

பிரசங்கியின் பிரசங்க சாமர்த்தியத்திற்கு வேதவாக்கியங்களை நன்றாய் அறிந்திருக்க வேண்டும். இது மிகவும் அவசியமானதாகும். பிரசங்கி தேவவசனத்தின் ஊழியக்காரனாயிருக்கிறபடியால் வேத அறிவு அவன் வேலைக்கு மிகப் பெரிய ஆயுதமாகும். வேதாகமம்தான் பிரசங்கியின் பாடப்புத்தகம். அது பிரசங்க வாக்கியங்களைத் தேடி பிடிக்கும் இடமாய் மாத்திரமல்ல. பிரசங்கங்களுக்கு அடிப்படையாயிருக்கிறது. பிரசங்கி போதிக்க வேண்டிய பொருள் தேவனுடைய வசனமே. அப்படியிருக்கப் போதகன் வேத அறிவில் தேறினவனாய் இருக்கவில்லையானால் அவன் எப்படி போதிக்க முடியும்? (1. பேதுரு 4 : 11).

வேதபுத்தகம் பிரசங்கியின் பிரசங்க வல்லமைக்கு மிகப் பெரிய ஆயுதமாகும். ஆவியானவர் வசனத்திற்குள்ளே இருக்கிறார். (எபி 3 : 7) அவருடைய வல்லமை வசனத்திலே இருக்கிறது. அவராலே பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் வெளிப்பட்டது. (2. தீமோ 3 : 16) பிரசங்கி அவரால் வெளிப்படுத்தப்பட்ட வேதவாக்கியங்களை நன்றாய் கற்றறிந்தால் தான் உபதேசிக்க முடியும். (2 தீமோ 3: 17) இவ்வுலகத்திற்குரிய மருத்துவர்களும், பொறியாளர்களும் தங்கள் தொழிலுக்குரிய கருவிகளை எப்பொழுதும் கையிலே வைத்திருப்பது போல பிரசங்கியும் எப்பொழுதும் வேத புத்தகத்தை கையிலே வைத்துக் கொண்டு எப்பொழுதும் அவ் வேத வசனங்களையே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். தினமும் ஐந்து வசனங்களையாவது படித்து மனதில் மனப்பாடமாக வைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் பிரசங்க நேரத்தில் சரளமாக வாய்விட்டு வசனத்தை சொல்ல முடியும்.

**3. *பிரசங்கியின் ஜெபம்***

பிரசங்கம் செய்வதற்கு முன் பிரசங்கி ஜெபிக்கிறவராயிருக்க வேண்டும். ஏனெனில் பிரசங்கத்திற்கு தேவை 'ஞானம்'. அது தேவனிடத்தில் இருக்கிறது. அதைப் பெற்றுக் கொள்ள ஒரே வழி ஜெபமாகும். பிரசங்கத்தை கேட்கிறவர்களையும், தன்னையும் கர்த்தருக்கேற்றபடி வழி நடத்தப்படவே

ஞானம் தேவை. சாலமோன் ராஜாவான பிறகு முதலாவது தேடினது ஞானத்தையே! ஏனென்றால் ஜனங்களை வழி நடத்த அது தேவைப்பட்டது. அதுபோல பிரசங்கிக்கும் ஞானம் அவசியம் தேவை. அது தேவனிடத்தில் இருக்கிறபடியால் அதற்காக தேவனிடம் ஜெபிக்க வேண்டும். (யாக் 1 : 5) மேலும், "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்கிற வேதவசனத்தை முதலாவது கடைபிடிக்க வேண்டியவர் பிரசங்கியே! (1 தெச 5:17 மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாய் ஜெப நேரங்களில் செலவிடுபவர் பிரசங்கியே!!

மற்றவர்களைக் காட்டிலும் பிரசங்கிமார்களுக்கே அதிகபாடுகளும், அதிக துன்பங்களும் நேரிடும். இப்படிப்பட்ட பாடுகளையும், துன்பங்களையும் தாங்குவதற்கு பெலனையும், இவைகளிலிருந்து விடுதலை பெறவும் தேவனிடத்திலே கேட்கிறவராயிருக்க வேண்டும். தேவனே பெலனையும், விடுதலையும் கொடுக்கிறவராயிருக்கிறார். (1. கொரி 10 : 13)

எதிராளியான பிசாசானவனை எதிர்க்க தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்வதில் ஜெபமும் கொடுக்கப்பட்டிருக்கிற படியால் (எபேசியர் :6:10–18) பிரசங்கி எப்பொழுதும் ஜெபம் என்ற ஆயுதத்தைத் தரித்திருக்க வேண்டும். பிரசங்கி ஜெபம் பண்ணும் முறைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஜெபிக்கும் போது பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே என ஆரம்பித்து ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் முடிக்க வேண்டும். (யோவான் 14 : 13, 14) வார்த்தைகளின் இடையிடையே ஆண்டவரே என்றும், கர்த்தாவே என்றும் அல்லேலூயா என்றும் வீண் அலப்பல்களை செய்யாமல் கருத்தோடு ஜெபிக்க வேண்டும். (1. கொரி 14 : 15, அப் 2 : 36, பிலி 2 : 11) முக்கியமாக சபை நடுவில் ஜெபிக்கும் போது தகுதியான வார்த்தைகளைக் கொண்டு ஜெபிக்க வேண்டும். வீணான முழக்கம் கருத்தில்லாத காதுக்கினிய வார்த்தைகள், மற்றவர்களைக் காயப்படுத்தும் வார்த்தைகள், அதிகாரமான வார்த்தைகள் சபையாருக்கு சம்பந்தமில்லாத வார்த்தைகள் இவைகள் அனைத்தும் தவிர்க்கப்பட வேண்டும். ஜெபம் என்பது தேவனிடம் முறையிடும் ஒரு விண்ணப்பமாகும். ஆகவே பிரசங்கி தனது வார்த்தையின் அலங்காரத்தை இப்பகுதியில் காண்பிக்காமல் தாழ்மையான எண்ணத்தோடு சபையாரின் தேவை உணர்ந்து அவர்களை தேவனிடம் ஒப்புக் கொடுத்து இரத்தினச் சுருக்கமாக நேரத்தை வீணாக்காமல் ஜெபிக்க வேண்டும். பிரசங்கம் போல் ஜெபம் நீண்டு கொண்டு போனால் சபையாரின் கவனம் ஜெப சிந்தையிலிருந்து வெளியேறிவிடும். ஆகவே ஜெபம் ஜெபமாகவே இருக்கட்டும். பிரசங்கம் பிரசங்கமாகவே இருக்கட்டும்.

**K.** பாஸ்கர், கோவில்பட்டி

ஒ) முதலாவது பிரமாணம் (பழைய ஏற்பாடு) இரண்டாவதான புதிய பிரமாணத்தால் மாற்றப்படும்படி முதலாவது ஏற்பாட்டை கிறிஸ்து மாற்றினார். எபிரேயர் 10 : 9 –10.

ஔ) கிறிஸ்து முதல் நூற்றாண்டு, கிறிஸ்தவர்களை, சாபத்தினின்று மீட்டார் (கலாத்தியர் 3 : 13).

ஃ) பழைய ஏற்பாடு ஒரு சட்டமாக நம்மை இன்று கட்டுப்படுத்தாது. அது கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு சட்டத்தால் மாற்றப்பட்டது.

### 3. புதிய ஏற்பாட்டைப்பற்றி உடன்படிக்கை எப்படி?

அ) எபிரெயர் 7 : 22 அநேக காரணங்களால் அது மேன்மையான உடன்படிக்கை.

ஆ) எபி. 9 : 15 இயேசுவே அதற்கு மத்தியஸ்தர்.

இ) 1 எபிரேயர் 8 : 6 இது மேலான வாக்குத்ததங்களின் மீது அமைக்கப்பட்டுள்ளது.

2 எபிரேயர் 7 : 19 இது மேலான நம்பிக்கையைக் கொடுக்கிறது.

3 எபிரேயர் 10 : 10 இதில் மேலான தியாகம் இருக்கிறது. இயேசுவின் சரீரமும் இரத்தமும் – எல்லாருடைய பாவங்களுக்காகவும் தியாகம் செய்யப்பட்டுள்ளது.

ஈ) எபிரேயர் 13 : 20 இது நித்திய உடன்படிக்கை.

1. எபிரேயர் 10 : 29 இது இயேசு கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தோடு தொடர்புடையது.

2. மத்தேயு 26 : 28 : – பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக சிந்தப்பட்ட புதிய ஏற்பாட்டின் இரத்தம்.

4. அப்படியானால் பழைய ஏற்பாடு இன்று நமக்கு பிரயோஜன மற்றது என்று அர்த்தமாகுமா? பின்வரும் காரணங்களுக்காக அது மதிப்புள்ளது.

அ) ரோமர் 15 : 4

ஆ) 1 கொரிந்தியர் 10 : 6, 11

இ) இது நம்மை ஒரு சட்டமாக பிணைக்கவில்லை. நாம் இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டின் கீழ் இருக்கிறோம்.

8) நாம் ஏன் தேவனுடைய வார்த்தைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம்? அது ஏன் அவ்வளவு முக்கியமானது.

அ) இந்த தன்மைகளை சிந்தித்துப் பாருங்கள்.

1. நாம் தொடர்ந்து இதை படித்து, அதன்படி ஜீவித்தால் நம்மை ஆவிக்குரிய வகையில் விடுதலை செய்யும் (யோவான் 8 : 31, 32)

2. இது விசுவாசத்தை உண்டாக்கும் (ரோமர் 10 : 17) யோவான் 20: 30, 31).

3. நன்மையும் ஆசிர்வாதமுமான வாழ்க்கையை நமக்கு காண்பிக்கிறது உபாகமம் (30 : 15, 19)

4. கர்த்தருக்கென்று நாம் கனி கொடுக்கத்தக்கதாக நம்மால் கிரியை செய்கிறது. (1 தெசலோனிக்கேயர் 2:13 கொ, 1:6, கலாத்தியர் 5 : 22, 23).

5. நமக்குத் தேவையான எல்லாவற்றையும் தன்னுள் கொண்டிருக்கிறது. (2 பேதுரு 1 : 3, 4).

6. இரட்சிக்கப்படத்தக்க ஞானவான்களாக நம்மை அது மாற்ற முடியும் (2 திமோத்தேயு 3 : 15).

அது உபதேசத்துக்கும் கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் போதுமானதாயிருக்கிறது. 2 தீமோத்தேயு 3 : 16.

7. இரட்சிக்கப்படத்தக்க ஞானவான்களாக நம்மை அது மாற்ற முடியும். (2 தீமோத்தேயு 3 : 15).

8. நம்மை முழுமையாகவும் எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ள வனாகவும் செய்கிறது. (2 : தீமோத்தேயு 3 : 17).

9. நம்மை உருவாக்கி நமக்கு சுதந்தரத்தைக் கொடுக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது. (அப்போஸ்தலர் 20 : 32).

10. இது சுத்தமானது. நாம் அதற்குக் கீழ்ப்படிந்தால் தேவன் நம் ஆத்துமாவை சுத்திகரிப்பார் (சங்கீதம் 12 : 6, 1 பேதுரு 1 : 23).

11. அது ஜீவிக்கிறதும் நிலைத்திருக்கிறதும் என்றும் நிற்கிறது மாயிருக்கிறது. (1 பேதுரு 1 : 23, 25).

12. இது ஒருக்காலும் ஒழிந்து போகாது. (மத்தேயு 24 : 35).

13. நாம் வளர இது உதவும் (1 பேதுரு 2 : 2)

14. நாம் இதை நம் உள்ளத்திலே பதித்துக் கொண்டால் நம் ஆத்துமாக் களை இரட்சிக்கும் யாக்கோபு 1 : 25, எபேசியர் 1 : 13.

15. அது இரட்சிப்புக்கேற்ற தேவ பெலனாயிருக்கிறது. (ரோ. 1 : 16)

16. இது தேவனுடைய நீதி அல்லது நியாயத் தீர்ப்பை வெளிப்படுத்து கிறது. (ரோமர் 1 : 17).

17. கிறிஸ்துவின் ஆராய்ந்து முடியாத ஐசுவரியத்தைப் பற்றி நமக்குச் சொல்லுகிறது (எபே 3 : 8).

18. இது பரிபூரணமான சுயாதீனப்பிரமாணம் (யாக் 1 : 25)

19. நம்முடைய இருதயங்களிலே இதை வைத்துக் கொண்டால் தேவனுக்கு விரோதமாக பாவஞ் செய்யாத படிக்கு நம்மைப் பாதுகாக்கிறது. (சங்கீதம் 119 : 105).

20. வேதனைக்காலத்தில் இதனிடம் நாம் திரும்ப வேண்டும் சங்கீதம் 119 : 50, 71)

21. இதை நேசிக்கிறவர்களுக்கு தேனினும் இனிமையானது (சங் 119 : 103)

22. இதன்மூலம் நாம் புரிந்து கொள்ளுதலைப் பெற்றுக் கொள்ளுகிறோம் (சங். 119 : 104).

23. இது நம் கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங். 119: 105)

24. இது அதிசயமானது (சங்கீதம் 119 : 129)

25. அது ஒளியையும் புரிந்து கொள்ளுதலையும் கொடுக்கிறது (சங்.119:130)

26. நம்முடை நடைகளை ஒழுங்காக்கும்படி அது கொடுக்கப் பட்டுள்ளது. (சங்கீதம் 119 : 123–124).

27. அது தியானிக்கப்பட வேண்டிய ஒன்று. (சங்கீதம் 119 : 148)

28. அது சத்தியம். சங்கீதம் 119: 151. 1யோவான்17: 17 எபேசியர் 1 : 13.

29. அது ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறது. (சங்கீதம் 119 : 161 139:6).

30. இது மகிழ்ச்சியை உண்டு பண்ணுகிறது. (சங் 119 : 70)

நம் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இது எழுதப்பட்டிருக்கிறது. (சங்கீதம் 119 : 168, 1 யோ 1 : 4.

31. அதை நேசிப்பவர்களுக்கு மிகுந்த சமாதானத்தைக் கொண்டு வருகிறது. (சங்கீதம் 119 : 168) அது நீதியாகும். (சங்கீதம் 119 : 172)

32. அது நீதியாயிருக்கிறது. (சங்கீதம் 119 : 172)

மேலும் இயேசு சொன்னால் நாம் அதன்மேல் தாகமாயிருந்தால் அதனால் நிரப்பிடுவோம். மத்தேயு 5: 6.

33. இது பரிபூரணமானது. ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது. நிச்சயமானது (சங்கீதம் 19 : 7).

34. அது நீதியானது. இருதயத்தை சந்தோஷிப்பிக்கிறது. சுத்தமானது கண்களை பிரகாசிப்பிக்கிறது. (சங்கீதம் 19 : 8)

35. அது பசும்பொன்னினும் விலையேறப் பெற்றது (சங்கீதம் 119 : 124)

36. அது ஆவியாயும் ஜீவனாயுமுள்ளது (யோவான் 6 : 63)

37. அதனால் நாம் மறுபடியும் பிறக்கிறோம். (யோவான் 3 : 5)

(1 பேதுரு 1 : 23. 1 கொரிந்தியர் 4 : 15 ரக்கோபு 1 : 18)

38. அதனால் நாம் ஜீவிக்கிறோம் (மத்தேயு 4 : 4)

39.அது நித்திய ஜீவனுக்குரிய வார்த்தை (யோவான் 12:50 பிலி 2:14)

40. அது இரட்சிப்பின் வார்த்தை (அப்போஸ்தலர் 13 : 26)

41. அது ஒப்புரவாகுதலுக்குரிய வார்த்தை (2 கொரிந்தியர் 5 : 19)

42. அது உயிர்ப்பிக்கிறதும், வல்லமையுள்ளதும் இருபுறமும் கருக்கான எந்த பட்டயத்திலும் கருக்கானதும் நினைவுகளையும் இருதயத்தையும் பகுத்தறிகிறதுமாயிருக்கிறது.

43. அது அதிக உறுதியான தீர்க்க தரிசனமாயிருக்கிறது. (2 பேதுரு 1 : 19)

44. அது பாறைகளை துண்டு துண்டாக உடைக்கக் கூடிய அக்கினியாகவும், சம்மட்டியாகவும் இருக்கிறது. (எரேமியா 23 : 29).

45. அது நமக்கு ஆலோசனை சொல்லும்படியாக உள்ளது. (எபிரேயர் 13 : 22)

46. அது நம்மை பலப்படுத்துகிறது. (1 யோவான் 2 : 14).

47. கடைசி நாளிலே நாம் அதனால் நியாயந் தீர்க்கப்படுவோம். (ரோமர் 2 : 16)

வேதத்தைப்பற்றி யோவான் 12 : 48 ரோமர் 2 : 16 வேதத்தைப் பற்றி தெரியாத ஒருவர் சொன்னபின் வரும் வார்த்தைகள் எவ்வளவு உண்மையுள்ளதாயிருக்கிறது.

இந்தப் பழமையான புத்தகம் தன்னகத்தே தேவனின் மனம், மனிதனின் நிலை, இரட்சிப்பின் வழி, பாவிகளின் இருண்ட நிலை, விசுவாசிகளின் மகிழ்ச்சி ஆகியவைகளைக் கொண்டுள்ளது. இதனுடைய சரித்திரங்கள் உண்மையும், உபதேசங்கள் பரிசுத்தமானதும் அதனுடைய பிரமாணங்கள் கட்டக் கூடியதாகவும் இதனுடைய தீர்மானங்கள் மாற்றப்படக் கூடாததுமாய் இருக்கிறது. ஞானமடைய இதை வாசியுங்கள், பாதுகாப்பாயிருக்க இதை விசுவாசியுங்கள் பரிசுத்தமாயிருக்க இதை கைக்கொள்ளுங்கள். உன்னை வழி நடத்த இதில் ஒளியும், போஷிக்க ஆகாரமும், மகிழ்விக்க ஆறுதலும், இதில் உள்ளது. இது பிரயாணிக்கிறவனின் வரைபடம் யாத்தீகனுடைய போதகன் மாலுமியின் திசைக்காட்டி, போர்வீரனின் வாள் மற்றும் கிறிஸ்தவனின் திட்டமாயிருக்கிறது. இதிலே பரதீசு மீட்டமைக்கப்பட்டது. பரலோகம் திறக்கப்பட்டது. நரகத்தின் வாசல்கள் திறக்கப்பட்டன. கிறிஸ்துவே இதன் கருப்பொருள் நம்முடைய நன்மையே இதன் அமைப்பும் கடவுளின் மகிமையே இதன் முடிவுமாகி இருக்கிறது. இது நம்முடைய நினைவுகளை நிரப்பவும், இருதயங்களை ஆளவும், கால்களை வழி நடத்தவும் வேண்டும். இதை மெதுவாக அடிக்கடி ஜெபத்துடன் வாசியுங்கள். இது செல்வங்களின் சுரங்கம், மகிமையின் சொர்க்கம், பேரின்ப நதி இந்த வாழ்வில் உனக்கு இது கொடுக்கபபட்டிருக்கிறது. நியாயத் தீர்ப்பிலே இது திறக்கப்படும். எப்போதும் நினைவு கூறப்படும். இதிலே மிக உயர்ந்த பொறுப்பும், வெகுமதியும், உழைப்பும் அடங்கி இருக்கிறது. இதனுடைய பரிசுத்த பிரமாணங்களோடு சர்ச்சைக்குள்ளாகிறவர்கள் யாவரையும் தண்டிக்கிறதுமாயிருக்கிறது. நான் ஏன் கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கம் என்ற புத்தகத்தின் 46ம் பக்கத்திலிருந்து ஆசிரியர் லெராய் பிரவுன்.

தேவனுடைய பார்வையில் ஆரோக்கியமான உபதேசங்களின் முக்கியத்துவம்

**(அ) தேவன் இந்த பொருளைக் குறித்து என்ன சொல்லுகிறார்.**

| | | |
|---|---|---|
| 1. | 1 தீமோத்தேயு | 1 : 4 |
| 2. | மத்தேயு | 7 : 13 : 15, 21 –23. |
| 3. | மத்தேயு | 15 : 8 : 9 |
| 4. | 2 தீமோத்தேயு | 1 : 13. |
| 5. | 2 தீமோத்தேயு | 4 : 1–4 |
| 7. | தீத்து | 1 : 9 – 14 |
| 8. | தீத்து | 2 : 4 |

9. 1 பேதுரு 4 : 11.

**(ஆ) ஆரோக்கியமான உபதேசம் என்றால் என்ன?**

1. 1 தீமோத்தேயு 1 : 10, 11.

**(இ) மாறுபாடான உபதேசத்தின் விளைவுகள் என்ன**

1. இது இதை போதிக்கிறவனையே அழிக்கிறது.
   1. கலாத்தியர் 1 : 6 –9
   2. 2 பேதுரு 2 : 1
   3. 2 பேதுரு 3 : 16
   4. 2 யோவான் 9.
2. கள்ள உபதேசம் தன்னை நம்புகிறவர்களையும் அழிக்கும்.
   1. மத்தேயு 7: 21 – 23
   2. மத்தேயு 15 : 13, 14
   3. 2 தொலோனிக்கேயர் 2 : 10 –12.
   4. 2 பேதுரு 3 : 17
3. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறேன், என்று சொல்லுகிறவர்கள் மத்தியிலே பிரிவினையை உண்டாக்குகிறது. 1 கொரிந்தியர் 1 : 10 – 13.

(ஈ) ஆரோக்கியமான உபதேசத்தைக் குறித்து ஒவ்வொரு கிறிஸ்துவனின் பொறுப்பு என்ன.

1. 1 யோவான் 4 : 1
2. எபேசியர் 5 : 10, 11
3. 1 தெசலோனிக்கேயர் 5 : 21, 22.
4. அப்போஸ்தலர் 17 : 11
5. மாற்கு 4 : 24
6. லூக்கா 8 : 18
7. சங்கீதம் 119 : 104, 128
8. ரோமர் 16 : 17
9. 2 யோவான் 9 : 11
10. 2 தெசலோநிக்கேயர் 3:6, 14, 15.
11. 2 தீமோத்தேயு 2 : 19.
12. தீத்து 3 : 10.

தொடரும்

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

| | | |
|---|---|---|
| **HINDI** | : | Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049. |
| **ENGLISH** | : | Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049. |
| **TELUGU** | : | Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001. |
| **TAMIL** | : | Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084. |
| **MALAYALAM** | : | Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034. |
| **KANNADA** | : | Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004. |

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, ஜனவரி-
ஜனவரி- THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -: அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK - POST

If undelivored Please return to
The Editor phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701